IX.—GOVERNMENT BILLS—*cont.*

(3) The Indian Registration (Madras Amendment) Bill, 1966.

* The Hon. Sri G. BHUVARAHAN: Mr. Speaker, Sir, I beg to move—

'That the Indian Registration (Madras Amendment) Bill, 1966,[a] be taken into consideration.'

Documents that are presented for registration may be classified under the following two categories, namely:—

(i) documents that are copied in the register books in full; and

(ii) documents in respect of which copies are filed.

At present filing of copies is restricted to certain types of simple documents, namely, leases and documents of a temporary nature specified in rule 114 of the rules made by the Inspector-General of Registration under the Indian Registration Act, 1908 (Central Act XVI of 1908). In such cases instead of copying a document in full a printed copy of the orginal document is filed in a file book. This system involves no expenditure on staff for copying the documents and on register books and other items of stationery. The time to register the document under this system will be much less. In view of these advantages, it is proposed to extend this system to all documents. Classes of documents, copies of which have to be filed will have to be specified by the Government under the rules to be framed by the Government. It is also proposed to allow handwritten, printed, typewritten, lithographed copies being received for the purpose of filing. Accordingly, it is proposed to make necessary provisions in the Indian Registration Act, 1908 (Central Act XVI of 1908).

I request the House, Sir, to accept the motion.

Mr. SPEAKER: Motion moved—

'That the Indian Registration (Madras Amendment) Bill, 1966, be taken into consideration.'

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் சபாநாயகர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டபடி இந்த மசோதாவை ஏற்றுக்கொள்ள முடியாமைக்கு நான் வருந்துகிறேன். இந்த மசோதாவை ஆட்சேபிக்க வேண்டிய நிலைமையில் இருக்கிறேன் என்பதை முதலில் தெரிவித்துக் கொள்ளுகிறேன். நான் கூறக் கூடிய காரணங்களைச் சிறிது நிதானமாகப் பரிசீலிக்க வேண்டும். ஏற்கனவே அதிகாரிகள் முடிவு எடுத்துவிட்டார்கள், அரசாங்கம் கொள்கை பூர்வமாக முடிவு எடுத்துவிட்டது, இனி என்ன செய்வது என்று வேண்டுமானால் சொல்லலாமே தவிர, நியாயத்தை மறுக்க முடியாது. இந்த மசோதாவின் நோக்கத்தைப் பற்றிச் சுருக்கமாக இதில் கூறப்பட்டிருக்கிறது:—

'This system involves no expenditure on staff for copying the documents and on register books and other items of stationery. The time to register the document under this system is much less and there is less scope for corruption.'

---

[a] Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 28th October 1966.

7th November 1966] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

இந்த நோக்கம் ஒன்றும் நிறைவேறப் போவதில்லை. அதற்கு மாறான நோக்கங்கள்தான் நிறைவேறும். இதுவரையில் 9 லட்சம் பத்திரங்கள் பதிவு செய்து வைத்திருக்கிறார்கள். 'பத்திரம்' என்ற பெயரைக் கவனிக்க வேண்டும். சொத்து இருந்தால் மட்டும் போதாது. சொத்துரிமைக்குப் பத்திரம் இருக்கவேண்டும். சொத்து உரிமையானது சர்க்கார் ரிக்கார்டுகளில் பதிவு செய்யப்பட்டிருக்கவேண்டும். சொத்துரிமையைப் பத்திரப்படுத்துவதற்கான முறை இது. இந்த முறையிலே ஒரு அடிப்படையான மாறுதலுக்கு இப்போது அரசாங்கம் ஏற்பாடு செய்கிறார்கள். நீண்டகாலமாக இருக்கின்ற தஸ்தாவேஜுகளையெல்லாம் பதிவு செய்வதென்றால், அதற்கென்று தனி இங்க் இருக்கிறது. அந்த இங்கில் எழுதிப் பதிவு செய்து விட்டால், 100 ஆண்டுகள் ஆனாலும், அது மறையாது. பிரத்தியோகமான இங்கை உபயோகப்படுத்தி, அதற்கான காகிதத்தில் எழுதி அதைப் புத்தகங்களில் வைக்கக்கூடிய முறையை மாற்றி, இப்பொழுது தனிக் காகிதங்களில் எழுதி, அடிக்கட்டு கொண்ட புத்தகங்களில் ஒட்டி வைக்கும் முறையைப் புகுத்துவதற்காக இந்தச் சட்டம் திருத்தப்படுகிறது. அதற்கான விதிகளையெல்லாம் செய்யக்கூடிய அதிகாரம் இந்தச் சட்டத்தின் மூலம் அரசாங்கம் எடுத்துக் கொள்ளுகிறது. என்ன முறை கையாளப்படும் என்று தெளிவு படுத்தப்படவில்லை. அளவுக்கு மிஞ்சிய அதிகாரத்தை இந்தச் சட்டத்தின் மூலம் இந்தத் துறையில் அரசாங்கம் எடுத்துக் கொள்ளுகிறார்கள். இதில் அதிகப் பொறுப்பு இருக்கிறது. இதனால் ஏற்படக்கூடிய விபரீதங்களைப் பற்றி அவர்கள் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதன் மூலம் சிக்கனம் ஏற்படாது; திறமை அதிகரிக்காது; விரைவாகப் பதிவு செய்யப்படும் என்று சொல்லுகிறார்களே அந்த நிலையும் ஏற்படாது; அதற்கு மாறான விளைவுகள்தான் ஏற்படும். லஞ்சம் குறையும் என்று கூறுகிறார்கள். லஞ்சம் குறையாது, லஞ்சம் அதிகரிக்கும் வாய்ப்பு இருக்கிறது என்பதைச் சில விவரங்கள் மூலம் நான் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

சிக்கனம் எப்படி ஏற்படும்? குமாஸ்தாக்களையும் காப்பி எழுதக்கூடியவர்களையும் ஆட்குறைப்பு செய்வதனால் சிக்கனம் ஏற்படும் என்று கூறலாம். அது ஒன்று தான் சிக்கனமாக இருக்கலாம். ஸ்டேஷனரியிலும் சிக்கனம் இருக்காது. ஆட்குறைப்பு மூலம் சிக்கனம், ஸ்டேஷனரி மூலம் சிக்கனம் என்பதற்குப் பதிலாக எவ்வளவு வருமானம் இவர்களுக்குக் குறையும் என்று பார்க்க வேண்டும். எண்ணூறு வார்த்தைகளுக்கு அதிகப்படியாக, 100 வார்த்தைகளுக்கு எட்டணா வசூலிக்கவேண்டும். 100 வார்த்தைகளுக்கு அதிகமாக ஒரு வார்த்தை இருந்தாலும் எட்டணா வசூலிக்கவேண்டும். அந்தத் துறையில் மட்டும் 10 லட்சம் ரூபாய் வருமானம் அரசாங்கத்திற்கு இருக்கிறது. குமாஸ்தாக்களையும், காப்பியிஸ்டுகளையும் ஆட்குறைப்பு செய்வதன் மூலம் 7½ லட்சம் ரூபாய் தான் சிக்கனம் ஏற்படலாம் என்று ஹைபவர் கமிட்டி சிபார்சு செய்திருக்கிறது. ஸ்டேஷனரியில் எப்படிச் சிக்கனம் ஏற்பட முடியும்? எழுத்து மூலம் காப்பி பண்ணக்கூடிய முறையில், ரிஜிஸ்டரில் அதிகமாகன பத்திரங்களைப் பதிவு செய்ய முடியும்.

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [7th November 1966

புதிய முறையில் மேலும் அதிகப் புத்தகங்கள் வேண்டியிருக்கும். பெரிய கட்டிடங்கள் கட்டி ஆபீசை விஸ்தரிக்க வேண்டியிருக்கும். இப்படிப்பட்ட நிலைமை ஏற்படுமே தவிர, ஸ்டேஷனரியில் சிக்கனம் ஏற்படுவதற்கு வகை இருக்காது. ஏனென்றால், பத்திரம் எழுதத் தனி இங்க் விற்க வேண்டும், தனிக் காகிதம் விற்க வேண்டும்; இதற்கெல்லாம் சிப்பந்திகள் வேண்டும். எந்தக் காகிதத்தில் எழுதிக் கொண்டு போனாலும் பதிவு செய்துவிடமாட்டார்கள். தனிக் காகிதம் வேண்டும். சாதாரணமாக வேறு அலுவலகங்களில் சலான் பாரம் இலவசமாக வாங்கிக் கொள்ளலாம் என்ற முறை இருந்தாலும், எட்டணா கொடுத்தால்தான் பாரம் கிடைக்கும் என்று நிலைமை பல இடங்களில் இருப்பதைப காணுகிறோம். அப்படி யிருக்கும்போது; ஸ்பெஷல் இங்க், ஸ்பெஷல் காகிதம் வாங்கவேண்டும் என்றால், அதற்கும் லஞ்சம் கொடுத்து வாங்க வேண்டிய நிலை ஏற்படுமே தவிர, லஞ்சத்தைக் குறைப்பதற்கான சந்தர்ப்பம் இல்லை. ஆகவே, லஞ்சம் குறையாது: சிக்கனம் ஏற்படாது. அதற்குப் பதிலாக நிர்வாகத்திலும் பல கஷ்டங்கள் ஏற்படும். பதிவு செய்யக் கூடியவர் தவறாகப் பதிவு செய்து விட்டால், சப்-ரிஜிஸ்திராருக்கு ஏழு வருஷ சிறைதண்டனை என்று இருக்கிறது. முன்பெல்லாம் பத்திரத்தை அப்படியே ரிஜிஸ்தரில் காப்பி பண்ணிவிடலாம். அப்பொழுது எழுதினவரின் பொறுப் பாக இருந்தது. பத்திரத்தின் உரிமையாளரின் பொறுப்பாக இருந்தது. இப்பொழுது இரண்டு பிரதிகள் கொண்டுவரும் போது இரண்டுபிரதிகளும் ஒரே மாதிரியாக இருக்கின்றதா என்று எல்லாவற்றையும் சப்-ரிஜிஸ்திரார் நேராகப் பார்க்க முடியாது. அதில் ஏதாவது தவறு ஏற்படுமானால் ஏழு வருஷம் ஜெயிலுக்குப் போகவேண்டியிருக்கிறது, சப்-ரிஜிஸ்திரார், "கொண்டுவரு கிறேன்" என்பதைக் 'கொண்டு வருகிறேன்' என்று பிரித்துத் தனி யாக எழுதி விட்டாலும் தவறு ஏற்படக்கூடிய சந்தர்ப்பம் இருக் கிறது. எழுத்துப் பிழையை அகற்றி, பத்திரம் சரியாக இருக்கிறதா என்று பார்க்கக் கால தாமதம் ஆகும்; சுலபத்திலே முடியாது. இப்போதுள்ள முறைப்படி, பத்திரத்தைக் கொண்டு போனால், மூன்று தினங்களுக்குள் பதிவு செய்துகொண்டுவிட்டு, நான்காம் நாள் பத்திரத்தைக் கொடுத்துவிடுகிறார்கள். அந்த முறையை விட்டு விட்டு, சப்-ரிஜிஸ்திராருக்கும் அதிகக் கடஷ்த்தைக் கொடுக்கக்கூடிய முறையை ஏற்படுத்துவதனால் லஞ்சம் ஜாஸ்தி ஆகுமே தவிர, பத்திரம் பதிவு செய்யவேண்டியவர்களுக்கு எந்த விதமான அனுகூலமும் கிடையாது என்பதை அனுபவத்தில் பார்த் தால்தான் தெரியும்.

டாகுமெண்ட் ரைட்டர்ஸைப் பொறுத்த வரையில் எந்தவித மான சட்டமும் கிடையாது. யார் வேண்டுமானாலும், எழுதத் தெரிந்தவர்கள் எல்லாம், பத்திரம் எழுதலாம் என்று இருக்கிறது. அவர்களெல்லாம் எழுதுவதை அப்படியே வாங்கி ஒட்டி வைத்துக் கொள்வதன் மூலம் பாதுகாப்பு ஏற்படுமா என்று பார்க்க வேண்டும். ஒட்டி வைக்கும் முறையினால் பத்திரப் பாதுகாப்பு இருக்காது என்றுதான் நான் நினைக்கிறேன். ஒட்டினதை எடுத்து விட்டு வேறொரு பத்திரத்தை ஒட்டிவைத்துவிட்டால் நிலைமை என்ன ஆகும், அதற்குச் சந்தர்ப்பம் ஏற்படுமா ஏற்படாத

7th November 1966] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். ஒட்டியதே காணுமற் போய்விட்டால் என்ன செய்வது என்பதையும் யோசிக்க வேண்டும். ரெவின்யூ ரிகார்டு சம்பந்தமாக ஐந்து வருடங்களுக்கு முன்னுல் மதுரை ஜில்லாவில் ஜமீன் சம்பந்தப்பட்ட ரிகார்டு காணுமல் போய்விட்ட சம்பவத்தைக் கவனிக்கவேண்டும். இப்படிப்பட்ட முறையில், பத்திரத்தையே கிழித்துவிடக்கூடிய நிலையும் புதிய முறையால் ஏற்படக் கூடும். ரிஜிஸ்தரில் பதிவு செய்துவந்த முறையில், கிழிப்பது என்பது அவ்வளவு சுலபமாக இருக்காது. புதிய முறையில், கையெழுத்துப் போடுவதில் கஷ்டம் இருக்கிறது. ஆகவே, புதிய முறையினுல், என்ன என்ன நன்மைகள் எல்லாம் ஏற்படும் என்று சொல்லுகிறுர்களோ அவற்றுக்கு மாருக, பல சங்கடங்கள் ஏற்படும், சிவில் கோர்ட்டுக்குப் போகக் கூடிய அவஸ்தை எல்லாம் ஏற்படும். உண்மையான நகல் வாங்க முடியும் என்று சொல்ல முடியாது. இதனுல் எல்லாம் சொத்து சம்பந்தமாகத் தகராறெல்லாம் ஏற்படக் கூடும். பதிவாளர் அலுவலகத்தில் உள்ள சில ஊழியர்கள் வேண்டுமென்றே, லஞ்சம் பெற்றுக்கொண்டதன் காரணமாகவோ வேறு காரணமாகவோ, பத்திரத்தைக் கிழித்து எரிந்துவிடுவார்களானுல், மூலப் பத்திரத்தின் காப்பியைப் பெறமுடியாத நிலை எல்லாம் ஏற்படக் கூடும். ஆகவே, புதிய முறையினுல் சொத்துக்குப் பத்திரம் இருக்கிறது என்று கூடச் சொல்லிக்கொள்ளமுடியாத நிலை ஏற்படும். இதில் சிக்கனமும் கிடையாது; பாதுகாப்பும் கிடையாது. இந்த முறையானது மிக மிக அபாயகரமானது. போட்டோ எடுக்கிற முறையே பரிசீலனை செய்யப்பட்டு. கைவிடப்பட்ட முறை. ஒட்டும் முறையைக் கொண்டு வந்து புகுத்தும் தவருன ஆலோசனையை எப்படி ஏற்றுக்கொண்டார்கள் என்று தெரியவில்லை. ஜனநாயகம் கண்ணியமாக நடந்தால் மட்டும் போதாது. எல்லா தஸ்தாவேஜிகளையும் சபையில் வைத்து அவ்வப்போது விவாதிக்கிற சந்தர்ப்பம் அளிக்கப்படவேண்டும். அப்படி வைற பவர் கமிட்டியின் யாதாஸ்தை சபை முன்பே விவாதித்திருந்தால் இத்தகைய ஒரு அபாயகரமான மசோதாவை அரசாங்கம் கொண்டு வந்திருக்க இடமேற்பட்டிருக்காது. அந்த மாதிரியான சந்தர்ப்பங்கள் தட்டிக் கழிக்கப்படுகின்றன. இன்றையதினம் இந்த மசோதாவினுல் 550 குமாஸ்தாக்கள் வேலை இழக்கும்படி நேரிடும் என்பது சிக்கனத்தை ஏற்படுத்தாது. கூடவே ஒரு ஐ.ஜி. ஏற்படுத்துகிறேம். நான்கு ரீஜனல் ஆபீசர்கள் ஏற்படுத்துகிறேம். இப்படிச் சிக்கனம் என்ற முறையில் கீழ் நிலையில் தான் ஆட்குறைப்புச் செய்யப்படுகிறதே தவிர மேல் நிலையில் எத்தனை கெஜட்டட் ஆபீசர்கள் நியமிக்கப்பட்டு வருகிறுர்கள் என்பதை எடுத்துப் பார்த்தால் தெரியும். இந்த முறை சிக்கனத்தை அளிக்காது. பாதுகாப்பை ஏற்படுத்தாது. பலவிதமான வில்லங்கங்களைத் தான் ஏற்படுத்தும். பாதுகாப்பு இருப்பதற்கு பந்தோபஸ்து கிடையாது. சுலபத்தில் அகற்றிவிட முடியும். லஞ்ச ஊழல்கள் தான் பெருக இடமேற்படுத்தும். கோவாபரேட்டிவ் பாங்கில் வைத்த நகைகளே காணுமல் போய் இருக்கிறது. அதற்கு யாரைப் பொறுப்பாளியாக்குவது என்று தெரியாத நிலையில் ஒட்டும் முறை புகுத்தப்பட்டால், ஒரு அதிகாரி போய் இன்னெரு அதிகாரி வரும்போது ஒட்டப்பட்டன எல்லாம் ஒழுங்காக இருக்கின்றனவா என்று பார்த்து பதவி ஏற்றுக்

1–30 p.m.

கொள்ளவேண்டும். இல்லையென்றால் யார் காலத்தில் கிழிக்கப்பட்டது என்றே கண்டுபிடிக்க முடியாது போய்விடும். யாரையும் பொறுப்பாளியாக்க முடியாத நிலை ஏற்பட்டுவிடும். இருக்கிற வில்லங்கங்கள் போதாது என்பதாக இந்த மசோதா புதிய வில்லங்கங்களைத்தான் ஏற்படுத்தும். இந்த முறை வந்தால் நிர்வாகம் சீரழிந்து விடும். இதை கொண்டு வருவதற்குப் பதிலாக இதை அரசாங்கம் வாபஸ் வாங்கிக்கொள்வதே நல்லதாக இருக்கும். தயவுசெய்து இந்த மசோதாவை வற்புறுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். இதை பொதுஜனங்களுடைய அபிப்பிராயத்திற்கு விட்டுவிடலாம். இன்னும் பொது தேர்தலுக்கு நான்கு மாதங்கள் தான் இருக்கின்றன. புதிய மந்திரிசபை வந்து வேண்டுமானால் இதை இன்னும் நன்கு பரிசீலனை செய்து, எப்படி இருந்தால் நல்லது என்று தீர்மானித்துக்கொள்ளட்டும். ஒருசிலருக்குப் பதவி உயர்வு கொடுக்க வேண்டும் என்பதற்காக மிகமிக அபாயகரமான இந்த மசோதாவைக் கொண்டுவரவேண்டாம். பதவி உயர்வு கொடுப்பதைப் பற்றி எனக்கு ஆட்சேபணை இல்லை. ஒரு ஐ.ஜி. நிர்வாக வசதியை உத்தேசித்துப் போட வேண்டுமென்றால் போட்டுக்கொள்ளுங்கள். நான்கு ரீஜினல் ஆபீசர்கள் போட்டுக்கொள்ளவேண்டுமென்றால் போட்டுக்கொள்ளுங்கள். வருவாய் இல்லாத துறை போல இது தெரியலாம். காரணம் ஸ்டாப் கட்டணத்தை தனியாக வைத்து விட்டோம். அது இந்த இனத்தின் கீழ் வரவேண்டியது தான். ஆகவே, இந்த மசோதாவை வாபஸ் பெறுங்கள். காரணம் பொது மக்களுடைய பத்திரங்கள் பத்திரப்படுத்தப்படவேண்டும். ஆகவே இதைக் கைவிடவேண்டும் என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

திரு. கே. ஏ. மதியழகன் : கனம் சபாநாயகர் அவர்களே, நமது செய்தித்துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள பத்திரப் பதிவு மசோதாவை திராவிட முன்னேற்றக் கட்சியின் சார்பில் நான் பலமாக எதிர்க்கிறேன். அவர்கள் இந்த மசோதாவைத் திருப்பிப்பெறவேண்டுமென்று, கேட்டுக்கொள்வதற்கு இந்த மன்றத்தின் முன்னால் நான் பேசுகிறேன். இந்த பத்திரப் பதிவுத் துறையில் இரண்டு வகையாக பத்திரங்கள் பதிவு செய்வதைப்பற்றி திரு. கலியாணசுந்தரம் அவர்கள் மிகத் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். இந்தத் துறையில் இப்போதே க்ளிப்பிங் செய்வது, பைல் செய்வது இருக்கிறது. இன்றைய தினம் ஹை பவர் கமிட்டி சொன்னார்கள் என்பதற்காக இந்த மசோதாவைக் கொண்டு வந்திருப்பது விளையாட்டுக் குழந்தைத்தனமாக இருக்கிறது. இந்த மசோதாவினால் நூற்றுக்கணக்கானபேர்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஒருசில அதிகாரிகள் போஸ்ட் உண்டாக்கப்படும் என்றாலும் கீழ் நிலையில் உள்ளவர்கள் பலர் பாதிக்கப்படுகிற பரிதாபகரமான நிலை ஏற்படுகிறது. இதனால் திரு. கலியாணசுந்தரம் அவர்கள் சொன்னதுபோல, நன்மையும் கிடையாது. ஏதோ திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்ப்பதாக நினைக்கவேண்டாம். இதைப்பற்றி இப்போதே எங்களுக்கு கோயம்புத்தூர், திருச்சிபோன்ற இடங்களில் இருந்து பல மனுக்கள் வந்திருக்கின்றன.

7th November 1966] [திரு. கே. ஏ. மதியழகன்]

Classes of documents, copies of which have to be filed, will have to be specified by the Government under the rules to be framed by the Government.

என்பதாக இந்த மசோதாவை எடுத்துக்கொண்டால் ஆழ்ந்த பரிசீலனை இல்லாமல் இது கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதனால் பொதுமக்களுடைய பத்திரங்களுக்கும் பாதுகாப்பு இல்லாமல் போகிறது. நகைகள் எல்லாம போகிற போக்கில் பத்திரங்கள் எவ்வாறு கிழித்தெறியப்படக்கூடும் என்று சொல்வதற்கில்லை. இந்த இலாகாவைப் பற்றி யாரும் அறியாதது அல்ல. எப்படி ஐ.ஜி. நியமிக்கப்பட்டார்கள் என்பதை எல்லோரும் அறிவார்கள். இப்போது அட்வகேட் ஜெனரலாக உள்ள திரு. மோகன் குமார மங்கலமே அவரது நியமனத்தைப் பற்றி ஹைகோர்ட்டில் இழுத்துவிட்டதை நாம் எல்லோரும் அறிவோம். இப்போதும் இன்னும் சிலபல அதிகாரிகளைப் போடவேண்டும் என்பதற்காக—இப்படிப்பட்ட ஆபத்தான ஒரு மசோதாவைக்கொண்டுவரவேண்டாம். இப்படிச் செய்வதனாலே கீழ்நிலையில் உள்ளவர்கள் பாதிக்கப்படுவார்கள். எப்படி அதன்காரணமாக அவர்களுக்கு உற்சாகம், ஊக்கம் ஏற்படமுடியும்? அமைச்சர் குறிப்பிட்டதுபோல ஏனோ தானோ என்று பொறுப்பற்ற நிலை உண்டாகிவிடும். அள்ளித் தெளித்த அவசரக் கோலமாக இதைக் கொண்டுவராது இதைக் கைவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதனால் பாதுகாப்பு இல்லை. லஞ்ச லட்சணம் பெருக்கத்தான் இடம்மறப்படும். எதேச்சாதிகாரப் போக்கில்—பாதுகாப்பற்ற தன்மையை உண்டாக்கக்கூடிய இந்த மசோதாவைத் திருப்பிப் பெறவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. எம். எஸ். செல்வராஜன்:** கனம் சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கக்கூடிய இந்த ரிஜிஸ்டரேஷன் சீர்திருத்த மசோதாவை நான் ஆதரிக்க இயலாமைக்கு வருந்துகிறேன். இதிலே புதுமை காணவேண்டுமென்ற முயற்சி இருக்கிறது. அதை நான் பாராட்டுகிறேன். இயல்பாக ரிஜிஸ்டரேஷன் டிபார்ட்மெண்டில் ரிஜிஸ்டர் செய்வதற்கு ஏற்படக்கூடிய தாமதம் காரணமாகத்தான் லஞ்ச பழக்கம் வருகிறது என்ற நல்ல நோக்கத்தோடு தான் இது பரிசீலிக்கப்பட்டிருக்கிறது. அந்த எண்ணம் நல்ல எண்ணம்தான், வரவேற்கத் தகுந்ததுதான். இதிலே இரண்டு பகுதிகள் உண்டு. இயல்பாக தற்காலிக குத்தகை தஸ்தாவேஜுகள், தற்காலிகமான சிறு டாகுமெண்ட்ஸ் இவற்றிற்கு நகல்கள் பைல் செய்கின்ற பழக்கம் இருக்கிறது. அந்தப் பழக்கத்தை எல்லாவற்றிற்கும் கையாள்வதன்மூலமாக ஏன் பரிகாரம் காணக்கூடாது. துரிதமாக ரிஜிஸ்டர் செய்ய வேண்டும். தாமதம் ஏற்படுகின்ற நிலைமை இல்லாமல் இருந்தால் லஞ்சம் இல்லாமல் இருக்கும். தாமதத்தை போக்கி லஞ்சம் இல்லாமல் செய்வதுதான் அடிப்படை நோக்கமாக இருக்கும். மற்றொரு அங்கத்தினர் குறிப்பிட்டதுபோல் இதில் சிக்கனமும் இருக்க வேண்டும். தற்காலிகமான தஸ்தாவேஜுகளுக்கு நகல் கொடுப்பதிலே கையெழுத்துப் பிரதிகளையும் வைத்துக்கொள்வதற்கு வழிமுறை இருக்கிறது. இப்போழுது கொண்டுவரப்படுகின்ற மசோ-

[திரு. எம். எஸ். செல்வராஜன்] [7th November 1966

தாவினால் அப்படிக் கொடுக்கக்கூடிய நகல்கள் கூட அச்சுப் பிரதியாகத்தான் கொடுக்கவேண்டுமென்றிருக்கிறது. இன்று முடித்து நாளைக்குள் ஒப்பந்தத்தை முடித்துக்கொண்டு ரிஜிஸ்டர் செய்யக் கூடிய பழக்கத்திற்குப் பதிலாக ஏன் பிரிண்டிங் பிரஸ்க்குப் போக வேண்டும்? தற்காலிக தஸ்தாவேஜுகளை ரிஜிஸ்டர் செய்துகொள்ள வேண்டுமென்ற எண்ணம் மாறி கூடுமானவரையில் ரிஜிஸ்டரே இல்லாத நிலைமை வரலாம். அப்பொழுது இந்த வகையில் வருமானம் குறையக் கூடிய நிலைமையெல்லாம்கூட வரும். தற்காலிக குத்தகை தஸ்தாவேஜுகளையெல்லாம் பிரிண்ட் செய்ய வேண்டிய நிலை பின்னால் வரும். நகல் எடுப்பதற்கு கட்டணம் செலுத்தாமல் தவறான சில முறைகளிலே நகலை எடுத்துபின்னர் பைல் செய்து கொள்ள இம்முறை வழிசெய்துவிடுமோ என அஞ்சுகிறேன். நகல் எடுப்பதற்குச் சாதாரணமாகப் பிரதியெடுத்து வைத்தால், நகல் தேவைப்படும்பொழுது வெளியே எடுத்துக்கூட பிரதியெடுத்து பின்னர் பதித்து, வைக்கக்கூடிய தவறான பழக்கத்திற்குக் கொண்டுபோய் விட்டுவிடும். உயர்தர அதிகாரிகளைப்போட்டு அதன்மூலமாக அதிகப்படுகின்ற செலவின் காரணமாக தாமதத்தைத் தவிர்க்கின்ற முறையிலே அரசாங்கத்திற்கு நம்பிக்கை இருக்கிறது. ஆங்காங்கு ஒன்றிரண்டு சிப்பந்திகளை அதிகமாகப் போடுவதின்மூலம் நாம நிச்சயமாகத் தாமதத்தைக் குறைக்கலாம். தாமதத்தைக் குறைப்பது ஒரு புறமிருக்க லஞ்சமும் இருக்க இடமிருக்காது. ரைட்டர்கள் எழுதும்போது பல கையெழுத்துக்கள் இருப்பதால் அவற்றையெல்லாம் சுலபமாக பார்த்து வாசித்துக் கொள்ள முடியாத அளவுக்கு கையெழுத்துக்கள் இருக்கும். இயல்பாகப் பதிவுசெய்துகொண்டால், நல்ல கையெழுத்து உள்ள சிப்பந்திகளால் அது எழுதப்பெற்றுவிடும். நிரந்தரமாக பதிவேடுகளில் எழுதுவதற்குள்ள நல்ல நிலைமை ஏற்படும். அதோடு முன்னால் பேசிய அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்ட மாதிரி இதற்கெல்லாம் பொறுப்பை யார் மீது சுமத்துவது என்ற கேள்வி எழும். எவ்வளவு காலமானாலும் அந்தப் பொறுப்பை எந்த சிப்பந்தி எடுத்துக்கொள்ளவேண்டுமென்ற கஷ்டம் எல்லாம் வரும். ஆகவே, இந்த மசோதாவை பூரணமாகப் பரிசீலனை செய்ய வேண்டியவேண்டிய அவசியமிருக்கிறது. இந்த மசோதாவின் மூலமாக தாமதம் தவிர்க்கப்படவேண்டும். லஞ்சம் ஒழிக்கப்படவேண்டும். சிக்கனம் கையாளப்படவேண்டும் என்ற நல்ல எண்ணங்களின் அடிப்படையிலே இந்த மசோதா கொண்டுவரப்பட்டாலும் அதிலே ஏற்படக் கூடிய கஷ்டங்களை எல்லாம் தீர்ப்பதற்கு ஏற்ற முறையில் முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER : I think we can take up the further consideration of the Bill tomorrow, because now it is already 1-45 p.m. (after a pause). The House will now adjourn and meet again at 8-30 a.m. tomorrow.

The House then adjourned.